திற்குச் செலவாகும் என்றும், ஏறத்தாழ 14 லட்சம் ரூபாய் நிர்வாகச் செலவுக்கு ஆகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இன்னொரு வகையான திட்டத்தை நிறைவேற்ற 554 லட்சம் ரூபாய் மொத்தச் செலவு என்றும் 16½ லட்சத்திலிருந்து 17 லட்சம் ரூபாய் வரை நிர்வாகச் செலவு என்றும் கருதப் படுகிறது. இப்படி எந்த வகைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானாலும், 500 லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட முதலீடு செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு மேல் அதை நடைமுறைப்படுத்த 16 லட்சத்திலிருந்து 17 லட்சம் வரை நிர்வாகச் செலவுக்கு என்று செலவிட வேண்டியிருக்கிறது. இன்னும் சிக்கனமான வழி வகை இருக்கிறதா என்று ஆராயப்பட்டது. பொதுப் பணித் துறையை கலந்தாலோசிக்கப்பட்டது. பொதுப் பணித் துறை யினுடைய குழாயோடு ஒரு குழாயை இணைத்து, அதன் மூலம் கால்வாயுடன் ஒரு குழாய் ஏற்படுத்துவதன் மூலம் செலவைக் குறைக்க முடியுமா என்பது பற்றி அந்தத் துறையுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகின்றது. இன்னும் திட்டவட்டமான முடிவு எடுக்கப்படவில்லை.

Temporary Judicial Second Class Magistrates

*107 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Second State Conference of the Tamil Nadu State Magisterial Service Association has requested the Government to issue orders to regularise the services of all the existing temporary Judicial School Class Magistrates ; and

(*b*) if so, the action taken thereon?

நீதித்துறை இரண்டாவது வகுப்பு தற்காலிக மாஜிஸ்டிரேட்டுகள்

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தற்போது பணியாற்றுகிற நீதித்துறை இரண்டாவது வகுப்பு தற்காலிக மாஜிஸ்டிரேட்டுகள் அனைவரின் பணியையும் முறைப்படுத்தி ஆணைகள் பிறப்பிக்குமாறு, தமிழ்நாடு மாநில மாஜிஸ்டிரேட்டுகள் சங்கத்தின் இரண்டாவது மாநிலக் கூட்டம் கேட்டுக் கொண்டுள்ளதா?